# ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவின் ஒரு பகுதி மூடப்பட்டுள்ளது




கோலாலம்பூர், அக். 5-
தலைநகர், ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் பெரும் வணிகர்கள் அதிகமாக இருந்தாலும், தீபாவளிக்கு முன்னதாக சிறிய மற்றும் சில்லறை வணிகர்களுக்கு அங்கு வியாபாரம் செய்யும் வாய்ப்பை கோலாலம்பூர் மாநகர் மன்றம் (டி.பி.கே.எல்.) வழங்குவது வழக்கம். ஆனால் ஏற்கெனவே அங்கு அவர்கள் வியாபாரம் செய்யும் இடம் தற்போது மூடப்பட்டுள்ளது. இதனால் அங்கு இம்முறை தீபாவளி கடைகள் போடப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. பல சில்லறை வியாபாரிகள் தீபாவளி போன்ற பண்டிகை காலத்து விற்பனையையே தங்கள் வருமானத்திற்கு பெரிதும் நம்பியிருக்கின்றனர். இம்முறை நிலைமை என்னவாகும் என்பது தெளிவாகத் தெரியாத நிலையில், அப்படியே தங்களுக்கு கடைகள் கொடுக்கப்பட்டாலும் அவற்றின் வாடகை குறைக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

(செய்தி விரிவாக பக்கம் 16),


# சிறிய, சில்லறை வியாபாரிகள் எங்கே செல்வார்கள்?

## டி.பி.கே.எல். பதில் சொல்லுமா? தீபாவளி விற்பனைகளில் சிக்கல்









★ இன்று நிலைமையே தலைகீழாக மாறி விட்டது

★ மஸ்ஜிட் இந்தியா எல்லாப் பகுதிகளுமே பாதுகாப்பானவை

★ தீபாவளி சந்தை கடைகளுக்கு வாடகையைக் குறைக்க வேண்டும்

★ துணிமணிகள், வீட்டு அலங்கார பொருட்களுக்கு சிறந்த இடமாக விளங்குகிறது





(எஸ்.ஜீவராஜா-ஆர்.குணா)

கோலாலம்பூர், அக்.5-
தீபாவளி என்றாலே தலைநகர் ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில்தான் அதன் குதூகலத்தையும் பரபரப்பையும் காண முடியும். ஆனால் எப்போதும் களைக்கட்டி இருக்கும் மஸ்ஜிட் இந்தியா வர்த்தக வளாகம் தற்போது முடங்கி காண்ப்படுவது வாடிக்கையாளர்கள் மற்றும் வணிகர்கள் மத்தியில் பெரும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

# தீபாவளி சமயத்தில் வாடிக்கையாளர்கள் இல்லாமல் தடுமாறுகிறது ஜாலான் மஸ்ஜிட் இந்தியா

கடந்த காலங்களில் உள்ளூர், வெளியூர் என பல இடங்களில் இருந்தும் கடைக்காரர்களும் வாடிக்கையாளர்களும் இப்பகுதிக்கு வந்து போவது வழக்கம். கிள்ளான் பள்ளத்தாக்கில் இருந்தும் மட்டுமல்ல தொலை தூரப் பகுதிகளான பினாங்கு, ஜொகூர்பாரு ஆகிய இடங்களில் இருந்தும் கூட பொருட்களை வாங்குவதற்கு இந்த பெருநாள் காலத்தில் பலர் மஸ்ஜிட் இந்தியாவுக்கு வந்து செல்வார்கள்.

பண்டிகை காலத்தில் இது வாடிக்கையான ஒன்று. ஆனால் இன்று நிலைமையே தலைகீழாக மாறி விட்டது. சுற்றுப் பயணியாக வந்த இந்தியப் பயணி ஒருவர் எதிர்பாராத விதமாக ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் பாதாளக்குழி ஒன்றில் விழுந்தச் சம்பவம் அப்பகுதி வர்த்தகத்தின் எதிர்காலத்தையே கேள்வி குறியாக மாற்றிவிட்டுள்ளது.

இந்த துயரச் சம்பவம் நிகழ்ந்து ஒன்றரை மாதங்கள் ஆகிவிட்டன. ஆனாலும் நிலைமை மாறவில்லை, மக்கள் மனநிலை மாறவில்லை, அந்த இடம் பாதுகாப்பானது என்ற நம்பிக்கை பிறக்கவில்லை.

மஸ்ஜிட் இந்தியா வட்டாரமே பாதுகாப்பானதாக இல்லை என்று சமூக ஊடகங்களில் சிலர் பரபரப்பான செய்திகளை வெளியிட்ட போதிலும் அதில் உண்மை இல்லை என்று அரசாங்கம் அறிவித்திருக்கின்றது.

## மழையும் ஒரு புறம் விரட்டுகிறது

மஸ்ஜிட் இந்தியாவிலுள்ள



★★ பரமேஸ்வரி இராமையா

எல்லாப் பகுதிகளுமே மக்களுக்கு பாதுகாப்பானதாக இருக்கிறது. எனவே இங்கு வந்து செல்ல பீதியடைய வேண்டாம்; தயக்கம் கொள்ள வேண்டாம் என்றலெல்லாம் அரசாங்கம் கூறுகிறது.

இந்நிலையில் பருவமழை காலமும் தொடங்கி விட்டது. கோலாலம்பூர் மாநகர் முழுவதும் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து கொண்டிருக்கிறது. பல இடங்களில் வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டிருக்கிறது.

தீபாவளி பண்டிகை காலத்தில் பொருட்களை வாங்க மஸ்ஜிட் இந்தியாவுக்கு செல்வதற்கு பதிலாக வேறு இடங்களுக்கு செல்லலாம் என்றெல்லாம் மக்கள் நினைக்க தொடங்விட்டனர். இந்த நிலை காரணமாக மஸ்ஜிட் இந்திய வணிகர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றனர்.

## வாடகையை குறைக்க வேண்டும்

இந்நிலையில், தீபாவளி பெருநாள் சந்தை கடைகளுக்கான வாடகையை குறைக்க வேண்டும் என சிறிய மற்றும் நடுத்தர வணிகர்கள் கேட்டுக் கொள்கின்றனர். அதே சமயம் வியாபாரம் புரிவதற்கான நாட்களையும் அதிகரிக்க வேண்டும். இல்லையேல் நாங்கள் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்க நேரிடும் என்று அவர்கள் மலேசிய நண்பனிடம் தெரிவித்தனர்.

கடந்த 2017ஆம் ஆண்டு தீபாவளி சந்தை கடைகளுக்கான வாடகை 150 வெள்ளியாக இருந்தது. இன்றைய பொருளாதாரச் சூழ்நிலையில் மக்களுக்கு கூடுதல் சுமையை ஏற்படுத்தும் வகையில் கோலாலம்பூர் மாநகர் மன்றம் நடந்து கொள்ளக்கூடாது என அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

முன்பெல்லாம் தீபாவளி சந்தை நடத்துவதற்கு மாநகர் மன்றம் ஒரு மாதம் அவகாசம் வழங்கியது. ஆனால் தற்போது அது இரண்டு வாரங்களாக குறைக்கப்பட்டுள்ளது. கோலாலம்பூரில் இதர பகுதிகளிலும் தீபாவளி சந்தைகள் இடம் பெறவுள்ளன.



★★கனகராணி வீரப்பன்

எனவே ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் வியாபாரம் செய்வோருக்கு முதலில் வாய்ப்பை வழங்க வேண்டும்.

தீபாவளியை முன்னிட்டு உணவுப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்களை வாங்குவதற்கு மக்கள் இங்கு திரண்டு வருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி தர வேண்டும் என அவர்கள் குறிப்பிட்டனர்.

மஸ்ஜிட் இந்தியா வட்டாரம் பாதுகாப்பானது என்பதை மக்களுக்கு உறுதிப்படுத்தும் வகையில் இந்த பகுதிகளில் விழிப்புணர்வு பிரச்சாரங்களை மேற்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தப்படுகிறது.

இது மக்களிடையே பீதியை அகலச் செய்து அவர்கள் முன்புபோல் இங்கு வருவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்த வகை செய்யும் என்றும் அவர்கள் கூறினர்.

## மக்கள் கூட்டம் குறைந்தது

அதே வேளையில் முன்பெல்லாம் தீபாவளி பண்டிகை காலம் தொடங்குவதற்கு முன்னதாகவே வெளியிடங்களில் இருந்து இங்கு



★★ ஸக்காரியா பின் அப்துல் காபார்

திரண்டு வந்து மாலைகளுக்கும் பூக்களுக்கும் முன் கூட்டியே ஆர்டர் கொடுப்பது வழக்கம். நாங்களும் அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் அனைத்தையும் செய்து கொடுப்போம் என்று பூக்கடைகாரர்கள் தெரிவித்தனர். ஆனால் இந்த தடவை மக்கள் கூட்டம் குறைந்து காணப்படுவதால் நாங்கள் அதிகமான மாலைகளையும் பூக்களையும் முன்கூட்டியே வாங்கி வைக்க இயலாத நிலையில் இருக்கிறோம்.

அப்படியே முன்புபோல் அதிகமான பூக்களை வாங்கி வைத்து விட்டு, கடைசி நேரத்தில் விற்கப்படாமல் போனால் அதனால் எங்களுக்குதான் பெரும் இழப்பு ஏற்படும். எனவே கடைசி நேரத்தில் வந்து ஆர்டர் செய்யாமல் திட்டமிட்டு முன்கூட்டியே ஆர்டர் செய்தால் அதற்கேற்ப நாங்கள் பூக்களை விற்பதற்கு தயார் நிலையில் இருக்க முடியும் என்றும் பூக்கடைக்காரர்கள் கூறுகின்றனர்.

## வாகனங்களை நிறுத்த வசதியில்லை

இந்நிலையில் சீரமைப்பு மற்றும் கட்டமைப்பு போன்ற பணிகள் காரணமாக மஸ்ஜிட் இந்தியா வட்டாரத்தில் வாகனங்களை நிறுத்துவதற்கு போதுமான இட வசதிகள் இல்லாமல் இருப்பதையும் மாநகர் மன்றம் கவனத்தில் எடுத்து கொள்ள வேண்டும்.

வாடிக்கையாளர்கள் இங்கு வருகின்றபொழுது அவர்கள் தங்களின் வாகனங்களை நிறுத்துவதற்கும் வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டும். வாகனங்களுக்கான கட்டணங்களை குறைக்க வேண்டும்.

அதே சமயத்தில் பெருநாள் காலங்களில் ஜவுளி பொருட்கள் துணி மணிகள், வீட்டு அலங்கார பொருட்கள் ஆகிவற்றை வாங்குவதற்கு மிக சிறந்த இடமாக மஸ்ஜிட் இந்தியா விளங்கி வந்திருப்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றாகும்.

இந்த தடவையும் நாங்கள் இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து பல்வேறு வகையிலான புதிய பாணியிலான ஜவுளிகளை எல்லாம் கொண்டு வந்திருக்கிறோம். உங்களின் விருப்பத்திற்கு ஏற்ப நியாயமான விலைகளில் விற்பதற்கும் நாங்கள் தயாரா இருக்கிறோம் என்று ஜவுளி கடைக்காரர்கள் கூறுகின்றனர்.

ஜவுளிகளை வாங்கி வெளியூர்களில் விற்பதற்கு விருப்பம் கொண்டிருக்கின்ற வாடிக்கையளர்கள் மொத்த விலையில் பொருட்களை வாங்கவும், விற்பனை செய்யவும் ஆர்வம் கொண்டிருக்கிறோம். எனவே வழக்கம் போலவே நீங்கள் இங்கு வந்து பொருட்களை வாங்கிச் செல்ல வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம் என்றும் ஜவுளி கடைக்காரர்கள் கூறுகின்றனர்.

கடந்த ஆகஸ்ட் 23 ஆம் தேதி, இந்தியா, ஆந்திர பிரதேசம், குப்பம் எனும் கிராமத்தைச் சேர்ந்த விஜயலட்சுமி ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் ஏற்பட்ட பாதாள குழியில் விழுந்து காணாமல் போன சம்பவத்திற்குப் பிறகு அப்பகுதி களையிழந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



★★தோமஸ் தனபாலன்